ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2030/47 - 2017 අගෝස්තු මස 04 වැනි සිකුරාදා - 2017.08.04
*2030/47 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2016*

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க,தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
2017, ஓகத்து 04.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மருத்துவ உபகரணங்கள் விலைகுறித்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர், வியாபாரி, வழங்குநர், மருந்தாளர், மருத்துவ தொழிலர் எவரும், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனம் அல்லது மருத்துவ உபகரணங்களை உடைமையில் கொண்டுள்ளவரானஆள் எவரும் வணிகப் பெயரினால்அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயரினால் விபரிக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதுமான ஏதேனும் மருத்துவ உபகரணத்தை அதனகத்துள் விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்கு (அ.சி.வி) அதிகமாக விற்றலோ, விற்பனைக்கு முனைதலோ அல்லது விதிப்பனவு செய்தலோ ஆகாது.

3. இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதும் தற்போது சொல்லப்பட்ட மருத்துவ உபகரணத்தை இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள அதிகபட்ச சில்லறை விலையைவிட குறைவான விலையில் விற்பனை செய்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர், வியாபாரி, வழங்குநர், மருந்தாளர், மருத்துவ தொழிலர், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனம் அல்லது மருத்துவ உபகரணங்களை உடைமையில் கொண்டுள்ளவரான ஆள், ஏதேனும் விலை அதிகரிப்பின்றி ஏலவேயுள்ள விலையைப் பேணுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றார்.

1A - PG 3391 — 807 (2017/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

4. அதனது வணிகப்பெயரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயரினால் விபரிக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதுமான ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்கு முனைகின்ற அல்லது விதிப்பனவு செய்கின்றவரான 2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் அல்லது நிறுவனம் ஒவ்வொன்றும் அத்தகைய மருத்துவ உபகரணத்தின் வணிகப்பெயர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயர் மற்றும் விலை என்பவற்றை தனிவேறான விடயமாக தெளிவாக சுட்டிக்காட்டுகின்ற பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

5. விற்பனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட அல்லது கிடைக்கக்கூடியதான அத்தகைய மருத்துவ உபகரணத்தின் இருப்பிலுள்ள ஒவ்வொரு விடயத்தின் ஒவ்வொரு அலகினதும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான இயைபான அதிகபட்ச சில்லறை விலை இவ்வொழுங்குவிதிகளின் வெளியீட்டுத் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் எனும் காலப்பகுதியொன்று முடிவுறுவதற்கு முன்னர், உகந்தவரை விரைவாக அவற்றின் முறையே வர்த்தகப் பொதியிடுகையில் அல்லது சுட்டுத்துண்டிடுகையில் அச்சிடப்படுதல் வேண்டும் அல்லது அடையாளமிடப்படுதல் வேண்டும்.

6. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்றவரான எவரேனும் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர், வியாபாரி, வழங்குநர், மருந்தாளர், மருத்துவ தொழிலர், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனம் அல்லது அத்தகைய மருத்துவ உபகரணங்களை உடைமையில் கொண்டுள்ள ஆளொருவர், தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும் என்பதுடன், 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் IVஆம் பாகத்தின் கீழ் விளங்கப்படற்பாலவராதலும் வேண்டும்.

7. இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையை ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்தில் காட்சிப்படுத்துதல் ஒவ்வொரு உற்பத்தியாளரினதும், இறக்குமதியாளரினதும், விநியோகிப்பாளரினதும், வியாபாரியினதும், வழங்குநரினதும், மருந்தாளரினதும், மருத்துவ தொழிலரினதும், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனத்தினதும் அல்லது அத்தகைய மருத்துவ உபகரணங்களை உடைமையில் கொண்டுள்ள ஆள் ஒருவரினதும் கடமையாதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளில் -

"மருத்துவ தொழிலர்" என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ளதான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தனியார் மருத்துவ நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை**

| விடயம் | | அதிகபட்ச சில்லறை விலை (அ.சி.வி) |
|---|---|---|
| 1. | வெற்று உலோக ஸ்டென்ட் (Bare Metal Stent) | ரூ. 24,000.00 |
| 2. | கரையும் மருந்துள்ளடங்கிய ஸ்டென்ட் (Drug Eluting Stent) | ரூ. 105,000.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.